## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை – 2017

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (''சபை'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 01 – நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

நியமத்தின் 32 ஆம் பிரிவுக்கு முரணாக 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 5,347,682 கூட்டுத்தொகையான ஏனைய வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகள் எதிர்கால நிலுவைப் பொறுப்புக்களிற்கான சாத்தியத்தன்மையை இனங்காணாமல் மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஏறத்தாழ ரூபா 526,264,886 கிரயத்திலான சொத்துக்களின் ஆயுள்காலம் முடிவடைந்த ஏறத்தாழ முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட இன்னமும் பாவணையிலுள்ள அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இருந்ததுடன் நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இதன்படி அவற்றினைக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) எல்கேஏஎஸ் 19- ஊழியர் நலன்கள்**

நியமத்தின் 58 மற்றும் 59 ஆம் பிரிவுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஓய்வூதிய நலன் உதவிக்கான (பணிக்கொடை ஏற்பாடு) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்துகையும் -**

7 முதல் 11 ஆண்டு காலத்திற்கு மேலாக மாற்றமடையாதிருந்த 33 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தொடர்பில் ரூபா 14,498 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டு மானியங்களின் மீதிகள் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு

மானியங்கள் தொடர்பான வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமையால் நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. திரட்டப்படாமை காரணமாக தீர்க்கப்படாத நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கத்தை அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமை காரணமாக கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

**(உ) எல்கேஏஎஸ் 23- கடன்படல் கிரயம்**

ரூபா 3.5 பில்லியனான உள்ளுர் கடன்களின் கீழ் தொடங்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொர்பில் ரூபா 3,922,080 தொகையான நான்கு (04) ஒப்பங்களின் கடன் கிரயம் நியமத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது.

**(ஊ) எல்கேஏஎஸ் 38- கற்பனைச் சொத்துக்கள்**

சபையானது நியமத்தின் 104 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் கற்பனைச் சொத்துக்களிற்கான திர்த்தல் காலப்பகுதி மற்றும் திர்த்தல முறை என்பவற்றினை மீளாய்வு செய்வதற்கு தவறியிருந்தது.

(உ) **எல்கேஏஎஸ் 40- முதலீட்டுச் சொத்துக்கள்**

(i) ரூபா 347.30 மில்லியன் தொகையான முதலீட்டு சொத்தின் பெறுமதி மதிப்பிடுகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 79 ஆம் பந்தியின் பிரகாரம், சபையானது பெறுமானத்தேய்வு முறை, ஆயுள் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம், காலப்பகுதியின் ஆரம்ப மற்றும் இறுதில் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த பெறுமானதேய்வு தொகை மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி குறைவுதொகை போன்றன தொடர்பில் முறையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 75(ஊ) மற்றும் (ஐ) இன் பிரகாரம் முதலீட்டு சொத்திலிருந்தான வருமானம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 28 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 167,679,950 கூட்டுத் தொகையான மீதிகள் புலனாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யப்படாமல் மூன்று முதல் ஒன்பது ஆண்டுகால வீச்சில் மாற்றமடையாதிருந்தது.

(ஆ) ரூபா 8,189,319,298 கிரயத்திலான 40 பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலைகளில் விடப்பட்டிருந்தது.

(இ) கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்ட ரூபா 2,421,893 ஆன இருப்பு மீதி குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக களனி பிராந்தியத்தில் இருந்தது. மேலும், இந்த இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திருகோணமலை பிராந்தியத்தில் பிரதான உதிரிப்பாகங்களின் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதி ரூபா 11,821,641 ஆக இருந்தது போதிலும், ரூபா 472,760 பெறுமதியான இருப்புக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) யாழ்ப்பாணம் பிராந்தி அலுவலகத்தின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ரூபா 7,000,000 கிரயத்திலான ஒரு தண்ணீர் கோபுரமொன்று (உட்கட்டமைப்பு) குத்தகை ஆதனக் கட்டிடம் ரூபா 5,202,608 இல் முலதனமாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 11,853 பெறுமதியான ஆறு ஏனைய சொத்துக்கள் பௌதீக ரீதியாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 780,532 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், வழமையான நிபந்தனைகள் இல்லாமல் ரூபா 3,000,000 கிரயத்திலான இன்னொரு தண்ணீர் கோபுரம் கணக்குகளிற்கு கொண்டுவரக்மூடிய நிலையில் இருக்காது. கைதவிர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் ரூபா 140,000 தொகையான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) சபையானது ஒவ்வொரு ஆண்டிலும் முன்னைய ஆண்டு சீராக்கல்களை செய்கையில் நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) குறிப்பிடத்தக்களவு சீராக்கல்களை தொடர்ச்சியாக் செய்வது வழமையாக உள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ஒவ்வொரு அண்டிற்கான இலாபம் கருத்திற்கொள்ளக்கூடியளவு தொகையால் வீழ்ச்சியடைந்திருந்தது. அத்தகைய முன்னைய சீராக்கல்களின் விளைவால் 2013 முதல் 2016 வரையான காலத்திற்காக நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) தேறிய தாக்கம் ரூபா 631.70 மில்லியனாக இருந்தது. நான்காவது ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கான சீராக்கல்கள் செய்வதற்கான சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் பொருண்மை மற்றும் உண்மைத்தன்மை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளில் அத்தகைய சீராக்க்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | வரவு வைக்கப்பட்ட தொகை | செலவு வைக்கப்பட்ட தொகை | திரண்ட இலாபத்திற்கான தேறிய தாக்கம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2017 | 388,443,514 | 62,528,713 | 322,914,801 |
| 2016 | 454,847,390 | 336,150,543 | 118,696,847 |
| 2015 | 184,251,720 | 192,301,771 | 8,050,051 |
| 2014 | 88,633,609 | 269,544,864 | 180,911,255 |

(எ) பத்து வாகனங்கள் மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும் மூன்று வாகங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு மாத்திரம் அந்த கைதவிர்ப்புகளின் மீதான இலாபம் அல்லது நட்டத்தின் கணப்பீடு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. ஏனைய சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானததேய்வு கருத்தில்கொள்ளாமை காரணமாக நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் அந்த சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 77,011,565 கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக அழிவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 65,683,426 தொகையான சிக்கன சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) பெறவேண்டியவையாக இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் வருமானச் வரிச் செலவினமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், இரண்டு நிலையான வைப்புக்கள் மீதான மொத்த முதலீட்டு வருமானம் ரூபா 5,328,915 ஆக இருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு வருமானமாக ரூபா 4,774,759 ஆன தொகை மாத்திரம் பதியப்பட்டிருந்தது. எனவே, நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 554,156 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

### 2.2.3 தொங்கல் கணக்கு

ரூபா 793,285,170 ஆன மொத்த தேறிய பெறுமதிக்கு சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதன மீதிகள் போன்ற அத்தகைய மீதிகளை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தொங்கல் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 18,600,450 தொகையான ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள், ரூபா 37,129,982 தொகையான ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள், ரூபா 13,071,361 தொகையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,428,544 தொகையான கணக்குப் புத்தகங்களிலுள்ள மிதிகள் என்பவற்றினை அந்த மீதிகள் உள்ளடக்கியிருந்தது. இதன்படி, 2017 இல் முடிவடைந்த ஆண்டில் உள்ளவாறு தொங்கல் கணக்கு மீதிகள் ரூபா 116,455 ஆக இருந்ததுடன் 2018 பெப்ரவரி இறுதி வரையும் அந்த கணக்கினை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிவ்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்குப் புத்தகங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்புக்களிலிருந்து ரூபா 9,161,858 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 2,001,798 ஆன தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. ரூபா 7,160,060 ஆன வித்தியாசத்தற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் சபையின் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட வியாபார கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்வு பட்டோலைக்கும் இடையில் ரூபா 20,470,232 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) பிராந்திய அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில் காட்டப்பட்ட விற்பனை வருமானத்தின் பெறுமதிக்கும் சபையின் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட சீராக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 12,423,545 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு மானியத்தின் பெறுமதி ரூபா 312,791,129 ஆகும். எவ்வாறாயினும், சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 289,218,261 ஆக காட்டப்பட்டது. எனவே, அந்த இரண்டு தொகைகளிற்கும் இடையில் ரூபா 23,572,868 ஆன விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) அம்பத்தளை, பாணந்துறை, களுத்துறை மற்றும் கம்பஹா போன்ற நான்கு பிராந்திய அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகளில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அத்தகைய சொத்துக்களின் நேரொத்த பெறுமதியுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த பட்டியல்களை ஒப்பீடு செய்யும் போது ரூபா 45,327,376 மற்றும் ரூபா 3,480,567 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நான்கு (04) போரேட்டுக் கணக்குகள் மற்றும் காண்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் மீள்பிரதியிடப்பட்ட ஆரம்ப மீதிகள் தொடர்பில் ரூபா 54.22 மில்லியன் கூட்டுமொத்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **விபரங்கள்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பிரதியீடு செய்யப்பட்ட மீதிகள்** | **கணக்காய்வு கணிப்பீடுகளின் பிரகாரம் மீதி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய கடன்பட்டோர் | 314,319,532 | 287,223,783 | 27,095,749 |
| ஒப்பந்தகாரர் பிடிகாசு | 3,669,249,055 | 3,662,866,437 | 6,382,618 |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | 1,221,394,974 | 1,221,425,775 | 30,801 |
| உள்ளூர் கடன்கள் | 19,767,069,288 | 19,746,356,156 | 20,713,132 |

(எ) வர்த்தகப் பிரிவின் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அளவீட்டு விற்பனை பெறுமதிகளிற்கும் மொத்த விற்பனைக்களிற்கும் இடையில் ரூபா 76.8 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிதிக்கூற்றுக்களிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடு என்பவற்றில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்களிற்கு இடையில் ரூபா 130,712,618 மொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **விடயம்** | **கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடு** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கடன்பட்டோர், பெறவேண்டியவைகள் மற்றும் வைப்புக்களிலுள்ள் வீழ்ச்சி | 17,370,079,818 | 17,491,801,822 | 121,722,004 |
| நிலையான சொத்துக்களின் கைதவிர்பு மீதான நட்டம் | 2,664,753 | 4,495,307 | 1,830,554 |
| கைதவிர்க்கப்பட்ட நிலையான சொத்தக்களிற்கான விற்பனை நடைமுறை | 2,001,798 | 9,161,858 | 7,160,060 |

(ஐ) பேரேட்டில் காட்டப்பட்ட கொழும்பு பொரும்பாக நீர் மற்றும் கழவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 2 இன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகைக்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளிற்கும் இடையில் ரூபா 13,856,197 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 இனங்காணப்படாத மீதிகள்

ரூபா 655,561,757 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத நடைபெறும் வேலைகளின் மீதி இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படாமல் 2004 இலிருந்து களுத்துறை பிராந்திய ஆதார நிலையத்தின் பேரேட்டில் இருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிராக குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | நடைபெறும் வெலைகள் | 92,429,112 | பிராந்திய ஆதார நிலையங்களின் விரிவான பட்டோலைகள் |
| (ii) | அசையாத மற்றும் அசையக்கூடிய சொத்துக்கள் | 1,006,678,141 | காலப்பகுப்பாய்வு |
| (iii) | ஏனைய கடன்பட்டோர் | 294,984,707 | விரிவான பட்டோலைகள் |
| (iv) | வியாபார கடன்கொடுத்தோர் | 833,652,596 | |
| (v) | ஏனைய கடன்கொடுத்தோர | 97,725,057 | |
| (vi) | காணிச் சுவீகரிப்பு முற்பணம் | 161,712,636 | |
| (vii) | ஊழியர்களிற்களிற்கான விசேட மிகையூதிய முற்பணம் | 9,608,060 | |

### 2.2.7. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர் ஏனைய கடன்பட்டோர் ஆகியோரின் ரூபா 1,111 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் கணக்குகளில் இருந்தன.

(ஆ) ரூபா 268,846 தொகையான வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ஒரு ஆண்டு கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2009 முதல் 2014 வரையான காலத்தின் போது ரூபா 77,889,359 தொகையான அத்தகைய காணிகளின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுககப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடுகளிலுள்ள மொத்த கடன்கொடுத்தோர் மீதிகளில் ஒரு ஆண்டிற்கு மேலாக இருபத்து ஆறு சதவீதமான கடன்கொடுத்தோரை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(உ) ரூபா 39,877,391 தொகையான ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமல் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. இதிலிருந்து சபையானது ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் தரவு நிரட்படுத்தலொன்று பேணப்பட்டிருக்காததிலிருந்து அவற்றின் மீதிகள் உறுதிப்படுத்தல்கள் ஊடாக கணக்காய்வில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியொன்று நிர்மாணிப்பதற்கு சபையால் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த காணி மதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 71.5 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் காணியின் உரிமையாண்மையை பெற்றுக்கொள்ளாமல் முற்பணமாக காணி உரிமையாளருக்கு 2014 ஏப்ரல் மாதத்தில் ரூபா 21.25 மில்லியன் பெறுமதிக்கு சமமான 30 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. காணியில் ஏற்கனவே சில குடும்பங்கள் வசித்திருந்ததடன் பின்னர் உரிமையாளர் முற்பணத்தை பெற்ற பின்னர் உரிமையான காணி விற்பனையிலிருந்து மறுதித்திருந்தார். செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணம் என்பன 2018 யூன் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கேகாலை பிராந்தியத்தில் ரூபா 6,020,554 தொகையான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 2017 திசெம்பர் 31 இ உள்ளவாறு இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தது.

## 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 770 | ரூபா 13,082,076 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 செப்தெம்பர் 22 ஆந்திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சபையின் ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகளின் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2017 இன் 07 ஆம் இலக்க சிக்கன சேவை கட்டண (ஈஎஸ்சீ) அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட சிக்கன சேவை கட்டணம் முற்கொண்டுவரப்படாமல் மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,991,969,398 (மீளப்பதியப்பட்ட) வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,882,455,821 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,109,513,577 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாக செலவினங்கள் மற்றும் நிதிக் கிரயங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதி விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது சபையின் மேலதிக பெறுமதி ரூபா 17,972 மில்லியன் கூட்டுத்தொகையான அந்த ஆண்டிற்கான ஊழியர் வேதனம், வரிச் செலவினம் மற்றும் பெறுமாத்தேய்வு என்பவற்றினை கணக்கிற்குள் எடுத்தபின்னர் ரூபா 19,789 மில்லியனாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 18,808 மில்லியனாக இருந்தது. எனவே, சபையின் மேலதிக பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 981 மில்லியன் அல்லது 5.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 இலாபத்தன்மை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் 4.3 சதவீதத்தால் அதகரித்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினம் 8.74 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனவே, மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 738,091,347 ஆன செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 58.04 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பதிவுசெய்திருந்த ஒரு ஊழியருக்கான ரூபா 975,560 மற்றும் ரூபா 289,023 ஆன முறையே பங்களிப்பு மற்றும் தேறிய இலாபம் 2017 ஆம் ஆண்டில் முறையே ரூபா 936,538 மற்றும் 182,084 ஆல் அல்லது 4 சதவீதம் மற்றும் 37 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 43.93 ஆன வருமானம் 2017 ஆம் ஆண்டில் 3 சதவீதத்தால் குறைந்திருந்த அதேநேரம் 2016 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 46.53 ஆன உற்பத்திக் கிரயம் 2017 ஆம் ஆண்டில் 1.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.2.2 குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டிற்கான சில குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 40.50 | 42.82 | 39.19 | 39.47 | 41.35 |
| தேறிய இலாப எல்லை | 7.61 | 12.68 | 5.53 | 7.62 | 5.87 |
| நடைமுறை விகிதம் | 4.14 | 5.97 | 4.48 | 1.76 | 1.29 |
| திரவ விகிதம் | 3.72 | 5.33 | 3.80 | 1.35 | 0.98 |
| மொத்த சொத்து சுழற்சி (தடவைகளின் எண்ணிக்கை) | 0.05 | 0.06 | 0.06 | 0.07 | 0.07 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், சபையின் பிரதான நிதி விகிதங்கள் கடந்த நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பாதகமான நிலையில் காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.07 சதவீதத்தால் பாரதூரமாக குறைவடைந்திருந்ததுடன் நடைமுறை விகிதம் மற்றும் திரவ விகிதம் அடுத்துவரும் நிதியாண்டில் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்களின் அதிகரிப்பு காரணமாக முறையே 1.83 மற்றும் 1.61 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல் மற்றும் மீளாய்வு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வர்த்தகத்திலுள்ள நலிவுகள் மற்றும் வர்த்தகத்தின் வெளிச் சூழ்நிலைகளின் பாதிப்பு என்பன 2016– 2020 வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் முன்னர் முறைப்படி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள், வருடாந்த கொள்வனவுத் திட்டம், மனித வள அபிவிருத்தி திட்டம் கடன் திருப்பிச் செலுத்துதல் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு என்பன 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் ஏழு பெரிய மட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் மூன்று பெரிய மட்ட கழிவகற்றல் செயற்திட்டங்கள் 2018 யூலை 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள மொத்தச் சனத்தொகைகளில் மொத்த குழாய் நீர் வழங்கல் மேவுகை மற்றும் கழிவகற்றல் மேவுகை முறையே 52.3 சதவீதம் மற்றும் 2.4 சதவீதம் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு உள்ளபடியான மேவுகை முறையே 49.2 சதவீதம் மற்றும் 2.07 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

#### 4.1.2 சுத்தமான தண்ணீரின் உற்பத்தியும் விநியோகமும்

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் உற்பத்தி மற்றும் அதன் கிரயம் மற்றும் கடந்த சில ஆண்டுகளாக வழங்கப்பட்ட புதிய இணைப்பக்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள்பின்வருமாறு உள்ளது.

| ஆண்டு | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| உற்பத்தி (கமீ) மில்லியனில், | 678 | 649 | 600 | 575 |
| அலகு கிரயம் (ரூபா) | 35.49 | 34.61 | 34.41 | 31.79 |
| புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை | 2,219,172 | 2,092,471 | 1,947,473 | 1,825,837 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது 2016 ஆம் ஆண்டில் 649 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் போது 678 மில்லியன் கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் உற்பத்திசெய்திருந்தது, இது 4.5 சதவீத அதிகரிப்பைக் குறிக்கின்றது. அதேபோல, மீளாய்வாண்டில் உற்பத்தி அலகு கிரயம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 முதல் 2017 வரையான காலத்தின் போது உத்தியோகத்தர் கிரயம், மின்சக்தி கிரயம், இரசாயணக் கிரயம் மற்றும் பராமரிப்புக் கிரயம் என்பவற்றின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காக குறிப்பிடப்பட்ட இலக்கின் பிரகாரம், இது மீளாய்வாண்டின் போது (2014 முதல் 2017 வரையான திரண்ட பற்றாக்குறையான இணைப்புக்கள் உள்ளடங்கலாக) 231,198 புதிய இணைப்பக்கள் வழங்குவதன் மூலம் இறுதியில் உள்ளவாறு 2,323,669 ஆன புதிய இணைப்புக்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 126,701 புதிய இணைப்புக்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 8.71 சதவீதமான வீழ்ச்சியை குறிக்கின்றது.

### 4.1.3 வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆறு ஆண்டுகளின் வருமானமற்ற நீரின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்) | 678.9 | 649 | 600.14 | 575.00 | 547.0 | 525.6 |
| தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்) | 507.5 | 483 | 436.27 | 410.92 | 381.6 | 368.5 |
| வருமானமற்ற நீர் (கன மீற்றர்) | 171.3 | 166 | 163.87 | 137.07 | 165.4 | 157.1 |
| தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற நீர் | **25.23** | **25.58** | **27.30** | **28.53** | **30.24** | **29.89** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி புறப்பாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக சாதாரண கிரயமொன்றாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், சராசரி வருமானமற்ற தண்ணீர் 2012 முதல் 2014 வரையான காலத்தின் போது மொத்த தண்ணீர் உற்பத்தியில் ஏறத்தாழ 1/3 பங்காக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது ¼ இற்கு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீர் நீர்க் கசிவு, சட்டவிரோத இணைப்புக்கள், இலவச வழங்கல் மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் போன்றன காரணமாக சபைக்கு குறிப்பிடத்தக்களவு நட்டமொன்றைக் குறிக்கின்றது. 2017 இல் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரின் பகுதி 43.14 சதவீதமாக இருந்ததுடன் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்கு குறிப்பிடத்தக்களவு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக ரூபா 30,124 மில்லியன் கிரயத்தில் இரண்டு பிரதான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர விநியோக முறைமைகளின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

(iii) 49 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதில் பிரதான முன்னேற்பாடாக கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் (01) 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது 2018 செப்தெம்பர் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 யூலை 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 46.18 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

(iv) கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதில் பிரதான முன்னேற்பாடாக கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் (II) 2014 செப்தெம்பர் 03 இல் தொடங்கப்பட வேண்டுமெனவும் 2019 யூன் 30 பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதான ஒப்பந்த நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5.61 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது.

(v) விசேடமாக அத்திகதியில் இனங்காணப்பட்டிருக்காத தண்ணீர் கசிவுகளைக் குறைக்கும் நோக்கில் பிரதான தண்ணீர் விநியொகங்கள் மீளமைக்கப்பட வேண்டியிருந்தது. பல பிரதான செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கான பிரேரணைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றினுடைய அமுலாக்கல் மிகவும் மெதுவான இடத்தில் உள்ளது.

(vi) கிழக்கு கொழும்பில் நகர (ரீசீ) வடக்கில் விசேடமாக கொழும்பு நகரம், கம்பஹா, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை மற்றும் பண்டாரவளை தவிர்ந்த பகுதிகளில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக சபையின் கவனம் போதியதாக இருக்காததுடன் எனவே கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் ஒத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(vii) சபையானது 1 சதவீதத்தால் வருமானமற்ற தண்ணீரின் தொகையை குறைக்க முடியுமாயின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 240.46 மில்லியனால் குறைக்க முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(viii) பிராந்தி ஆதார நிலையங்களில் (ஆர்எஸ்சீ) வருமானமற்ற தண்ணீரின் உள்ளபடியான மற்றும் இலக்கின் சதவீதத்திற்கும் இடையில் கவனத்திற் கொள்ளக்கூடியளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆர்எஸ்சி இன் பெயர்** | **வருமானமற்ற தண்ணீர் 2017 (சதவீதமாக)** | | |
|---|---|---|---|
| | **இலக்கு** | **உள்ளபடியானது** | **முரண் (சாதகம்/ (பாதகம்)** |
| மேற்கு மத்தி | 34.5 | 33.8 | 0.7 |
| மேல் தெற்கு | 26.4 | 20.6 | 5.8 |
| மேல் வடக்கு | 23.0 | 19.3 | 3.7 |
| தெற்கு | 26.0 | 22.7 | 3.3 |
| ஊவா | 20.3 | 25.9 | 5.6 |
| மத்திய | 22.0 | 22.6 | (0.6) |
| சப்ரகமுவ | 23.8 | 30.3 | (6.5) |
| வடக்கு மேல் | 10.0 | 13.0 | (3.0) |
| கிழக்கு | 13.3 | 22.8 | (9.5) |
| வடக்கு மத்தி | 15.2 | 16.9 | (1.7) |
| வடக்கு | 21.0 | 26.6 | (5.6) |
| நாடு பூராகவும் | 27.3 | 25.2 | (2.1) |

### 4.1.4 கழிவுநீர் முறைமை

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.2. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக (கழிவகற்றல்) பெரும் எண்ணிக்கையான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த செயற்திட்டங்களின் அமுலாக்கல் தொடர்பில் செய்யப்பட்ட அவதானிப்புகள் பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.2.1 அம்பத்தளை சக்தி சேமிப்பு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த செயற்திட்டத்தின் மொத்த அமுலாக்கல் காலப்பகுதி 63 மாதங்களாக இருந்ததுடன் அதில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 39 மாதங்கள் காலாவதியாகியிருந்தது. எவ்வாறாயினும், அத்திகதியிலுள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக 7.7 சதவீதமாக இருந்தது.

(ஆ) புதிய குழாய்களின் 1200 மிமீ விட்டங்களின் இயலளவுடன் 9 கிலோமீற்றரிற்கான பழைய குழாயிடலினை மீளமைக்கின்ற பிரதான ஒப்பந்தம் 201 மே 04 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2018 மே 04 இல் உள்ளவாறு 500 மீற்றர்கள் மாத்திரம் குழாயிடப்பட்டிருந்தது.

### 4.2.2 கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னெற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதயிலுள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 37.41 சதவீதம் மற்றும் 47.39 சதவீதமாக இருந்தது. கொழும்பு நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக முறைமை புனரமைப்பின் பிரதான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 45 சதவீதம் மற்றும் 27 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றுவதில் தாமதம், குழாயிடல் வேலைகளிற்காக திறந்த அகழி முறைக்கு அகழிகளற்ற முறை மாற்றுதல் மற்றும் ஒப்பந்தகாரர்களின் குறைவான செயலாற்றல் போன்றன பின்பற்றவதிலுள்ள தாமதங்கள் நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளழன் அமுலாக்கலில் மெதுவான முன்னேற்றத்திற்கு வித்திட்டிருந்தது.

(ii) கொழும்பு நகரத்தின் வடக்கு பகுதிகளில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக முறைமை புனரமைப்பற்கான கேள்வி ஆவணத்தின் பிரகாரம், குழாயிடலிற்காக திறந்த அகழி முறைக்கு பதிலாக முள்இணைப்ப மற்றும் குழாய் குழாய் வெடிக்க வைத்தல் (அகழிகளற்ற முறை) ஊடாக அமுலாக்கப்பட

வேண்டுமென திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தகார் அகழி முறையை மாற்றுவதற்கு பிரேரணையை சமர்ப்பித்திருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் 3.1 மற்றும் 13.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக முரண் குழுவின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உள்ளபடியான வேலைத்தள நிலைமைகள் மற்றும் நீர் வழங்கல் வலையமைப்பின் தற்பொதைய நிலைமைகள் என்பவற்றினைக் கவனத்திற் கொள்வதன் மூலம் முறையான வடிவமைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் பிரதான நோக்கெல்லையை மாற்றுதலில் விளைவால் அகழியற்ற தொழில்நுட்பத்தின் கீழ் கேள்விகோரல் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஒப்பந்தகாரர்களிற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டது.

### 4.2.3 கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த செயற்திட்டம் 13 கூறுகளைக் கொண்டுள்ளதுட் செயற்திட்டத்தின் முன்னெற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் ஆக்கக்கூறுகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றமானது ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல், கொழும’மு மாநகர சபையிடமிருந்து அனுமதி பெறுவதிலுள்ள தாமதம் மற்றும் நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் போன்றன காரணமாக 5.61 சதவீதமாக இருந்தது. மேலும், பாணந்துறை அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிட நிர்மாணம், அரசாங்கம் உடமையாக்கப்பட்ட வீட்டுத்தொகுதி குழாயிடல் முறைமைகளின் புனரமைப்பு மற்றும் மேல் மத்திய– பிராந்திய ஆதார நிலையத்திற்கான 02 தொகுதி செயற்பாட்டு உபகரணங்களின் கொள்வனவு என்பவற்றிற்கான ஒப்பந்தங்கள் 2017 திசெம்பர் 31 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், கொழும்பு நகரத்தின் மேற்கு மற்றும் தெற்கின் வருமானமற்ற தண்ணீரிற்கான முறைமை புனரமைப்பின் ஆக்கக்கூறின் கீழ் செயற்திட்டத்தால் வழங்கபபட்ட ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கல் திகதி மற்றும் சமுதாய நடமாடும் விழ்ப்புணர்வு மற்றும் நடத்தை மாற்றங்களின் ஆலோசனை சேவைகள் என்பவற்றின் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 வரை பின்னால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(iii) முற்பணமளிக்கப்பட்ட கொள்வனவாக கடனளிக்கும் முகவரால் ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்டடிருந்த போதிலும் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான ஒப்பந்தத்தின் கொள்வனவு நடைமுறையை பூர்த்தியாக்குவதற்கு 504 நாட்கள் செலவழிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், முறையான தீர்க்கமான அளவீடுகளின் அடிப்படையில் ஆரம்ப கட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், இந்த ஆக்கக் கூறிக் கீழ் 90 கிலோமீற்றர் மதிப்பிடப்பட்ட குழாயிடல் வேலைகளின் நீளம் 194.5 கிலோமீற்றர் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தத்தின் கேள்வி ஆவணங்களின் பிரகாரம், மூலப்பொருட்களை பயன்படுத்துவதில் உற்பத்தி உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் மதிப்பாய்வு செய்யும் நோக்கத்திற்கான பிரதான நபர்களின் விபரங்கள் கேள்வி சமர்ப்பித்தலின் இறுதிதிகதியிலுள்ளவாறு தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கொழும்பு நகரத்தின் மேற்கு பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பின் ஆக்கக்கூறின் கீழான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 01 இல் கைசாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கை திகதிவரையுத உரிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத கேளிவியாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 9.57 சதவீத மெதுவான

முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. அதற்கு மேல், நீரியல் நவீனமயப்படுத்தலிற்கான சொல்லப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வெலைகள் மற்றும் 18 மாவட்டங்கள் மீற்றரிடல் பகுதிகள் மற்றும் 02 பிரதான ஊடுருவலின் விரிவான வடிவமைப்பு என்பன 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 சனவரி 10 இல் வழங்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் பிரதான ஊடுருவல் முறைமைக்கான நீரியல் நவீனமயப்படுத்தலிற்கான வெலைகள் மற்றும் 9 மாவட்டங்கள் மீற்றரிடல் பகுதிகள் விரிவான வடிவமைப்பு என்பன 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அளவீடு செய்யப்பட வேண்டுமென இலக்கிடப்பட்ட 35,000 வீடுகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பந்தப்பட்ட 15,894 வீடுகள் அளவீடு செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2019 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 155 கிலோமீற்றர் குழாயிடல் வெலைகளில் 02 கிலோமீற்றர் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(vi) தண்ணீர் பாவணையாளர்களிற்காக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை மாத்திரம் கொண்டுள்ளது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு பொதிகளின் கீழ் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் இனங்காணப்பட்ட விடயங்களிற்கான சிபார்சுகள் மற்றும் தீர்வுகள் போன்றன அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிற்கு வருகைதந்த பின்னர் தண்ணீர் பாவனையின் முறையை மாற்றுவதை மதிப்பாய்வு செய்வதற்கு அங்கு முறையான பொறிமுறையொன்று இருக்கவில்லை.

(vii) பாணந்துறையில் அப்பகுதி பொறியிலாளர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக குத்தகை அடிப்படையில் 2015 செப்தெம்பர் 02 இல் செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி அதற்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 10 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது கொழும்பு மாநகர சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கு மேல், அலுவலக கட்டிடத்தின் படம் வரைதல் வேலைகளில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2.11 மில்லியன் இன்னொரு முற்பணம் உரிய காணி மாற்றப்பட்டமை காரணமாக பயனற்ற செயலவனமாக இருந்தது.

(viii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவிலுள்ள வேண்டுகைக்கு முரணாக பதில் கடமை அடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளரின் (கிழக்கு மாகாணம்) பதவிக்காக செயற்திட்டத்தின் பணிப்பாளரை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் நியமித்திருந்தார்.

### 4.2.4 உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் மொத்த உடன்பட்ட மானியத்தில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 06 ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 340.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.31 மில்லியன் அல்லது 45.47 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக மீதமிருக்கின்ற செயற்திட்டக் காளப்பகுதிக்குள் ஒதுக்கிய மிகுதி தொகையின் பயன்பாட்டின் சாத்தியத் தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளது.

(ii) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டமானது 07 ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளதுடன் அதில் கள சுகாதார முன்னேற்றங்களிற்கான ஆக்கக்கூறு ஒப்பந்தங்ள் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரிக் குறைவான செயலாற்றல் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26.52 சதவீத மெதுவான முன்னெற்றத்தை காட்டியிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் செயற்திட்ட ஆக்கக்கூறுகளின் ஒட்டுமொத்த பௌதீக மன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதவீத பௌதீக முன்னேற்றம் அடையப்பட ேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 91.6 சதவீதத்தில் இருந்தது.

(iii) களச் சுகாதார முன்னேற்றத்தின் ஆக்கக்கூறிற்கான ஒப்பந்தம் 2016 மே 16 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 அளவில் தெகிவளை, மொரட்டுவை, கொலன்னாவ மற்றும் ஜா-எல பகுதிகளில் 3,785 சுதிகரிப்பு பொறிகளை வழங்கி பொருத்துவதற்கும் 1,135 மலசலகூடங்கள் நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயிறும், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், குளியாப்பிடடியில் அமைந்திருந்த உற்பத்திப் பரில் போதி தொழிலாளர் படையணி இன்மை மற்றும் சுத்திகரிப்பு பொறிகளின் உருக்குதல் வேலைகளின் குறைவான செயலாற்றல் போன்றன காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்டவற்றில் முறையே 556 அல்லது 15 சதவீதம் சுத்திகரிப்பு பொறிகளின் பொருத்துதல் மற்றும் 205 மலசலகூடங்கள் அல்லது 18 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பின்னர், ஒப்பந்த வேலைகைளை துரித்படுத்தும் நோக்கில் 2018 மே 15 இல் நான்கு (04) வேறு ஒப்பந்தகாரர்களிற்கு அதே ஒப்பந்தத்தை மீள வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பிரதான ஒப்பந்தகாரர் பொருத்துதல் பகுதியை கையேற்ற போதிலும் 2018 யூலை 17 அளவில் புதிய ஒப்பந்தகாரர்களின் நாளாந்த தேவைகளின் சுத்திகரிப்பு பொறிகளை வழங்குவதற்கும் தவறியிருந்தார்.

(iv) செயற்திட்டமானது கொலன்னாவ பிரதேச செயலாளர் பகுதியில் 950 களச் சுகாதார வசதிகளை வழங்குவதற்கும் 285 மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணைமுறி உத்தரவாதங்கள், காப்புறுதி மற்றும் தளபாடங்களின் பராமரிப்பு போன்றவற்றிற்காக ரூபா 2,135,939 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது நலனாளிகளிற்கு எவ்வித நன்மைகளையும் வழங்குவதற்கு தவறியிருந்தது என வெளிப்பட்டது.

(v) மேற்குறிப்பிட்ட பகுதி (III) இல் கையேற்றப்பட்ட பெருத்துதல் பகுதி ரூபா 153.30 மில்லியன் மொத்த ஒப்பந்த பெறுமதியில் நான்கு (04) ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பொருத்துதல் ஒப்பந்தத்திற்கான பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 117.92 மில்லியனாக இருந்தது. இதன்விளைவால், புதிய ஒப்பந்தகாரர்கள் ஆரம்ப மதிப்பீட்னை விஞ்சி ரூபா 35.38 மில்லியன் ஏற்படுத்துவதன் மூலம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், மேலதிக செலவினம் அரசாங்கம் மற்றும் தேசிய நீர் வழங்கல் சபைக்கு ஏற்படுவதுடன் கொடையளிக்கு முகவர்களிடமிருந்து மீளளிப்பதற்கான சாத்தியம் இருக்கவில்லை.

**4.2.5 கண்டி வடக்கு- பாததும்பற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தம் 2015 யூன் 16 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 22 இல் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) நோக்கெல்லையை குறைத்த பின்னர் (ஏற்பாடுகள் மற்றும் விலை வேறுபாடுகள் தவிர்த்து) இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ரூபா 24,790..24 மில்லியன் எனவே, மில்லியனாக இருந்ததுடன் இது சபையின் ரூபா 16,169.35 மில்லியன் (நோக்கெல்லையை குறைத்த முன்னர்) பொறியியலாளர் மதிப்பீட்டின் 53 சதவீதத்தால் விஞ்சியிருந்தது.

(iii) சபையின் பொறியியலாளர் மிப்பீடுகளின் பிரகாரம், வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தில் ஏற்பட வேண்டியிருந்த மதிப்பிடப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 26,388,500 ஆக இருந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு ஒப்பந்தகாரரின் ஒப்பந்த பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 192,336,418 ஆக இருந்தது. எனவே, வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தில் ஏற்பட வேண்டியிருந்த திட்டமிடப்பட்ட தொகை 629 சதவீதத்தல் விஞ்சியிருந்தது.

(iv) கொள்வனவு வழிகாட்டலின் 5.3.9 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வியாளர்கள் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவிற்காக பொருத்தமான நியாயப்படுத்தல்கள் சமர்ப்பிப்பதற்கு வேண்டப்பட்டன. எவ்வாறாயினும், பின்வரும் விடயங்கள் அத்தகைய நியாயப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாமல் சபையால் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

| விடயம் | மதிப்பீட்டில் வழங்கப்பட்ட தொகை | சுங்க வரியாக வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா |
| கல் உடைத்தல் மற்றும் அகற்றல் | 1,470,033 | 12,905,856 |
| 27 மரங்கள் வெட்டுதல் | 229,608 | 2,003,499 |
| 135 கூரை மரங்கள் வெட்டுதல் | 73,080 | 637,425 |

(v) மேலும், மீள் குடியேற்ற குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக வீடொன்று 483 சதுர மீற்றர் பரப்பளவில் இரண்டு (02) வீடுகள் நிரமாணிப்பதற்கு மதிப்பீட்டில் ரூபா 31.92 மில்லியன் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 4.2.6 கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்த்தின் குறிக்கோள்களிற்கு முரணாக, ஒப்பந்தகாரர் சபையின் தலைவரின் பயன்பாட்டிற்காக ஜீப்பொன்று கொள்வனவு செய்வதற்கு சபையால் செய்யப்பட்ட வேண்டுகைகளில் 2016 மார்ச் 18 இல் தலைமை அலுவலகத்திற்கு ரூபா 18,600,000 ஆன தொகை அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த நிதி வாகனக் கொள்வனவிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒப்பந்தகாரர் வருகைக் கட்டணமாக ரூபா 980,000 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ii) வருமானமற்ற தண்ணீரை குறைக்கும் நோக்கில் தண்ணீர் பொருத்தி பரிசோதனை ஆய்வுகூடம், தண்ணீர் அளவைமாணி பரிசோதித்தல் ஆய்வுகூடம் மற்றும் ஈரப்பதன் கிணறு பரிசோதித்தல் பிரிவு என்பன 2016 பெப்ரவரி 29 இல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பிரிவுகள் 2018 யூலை 31 வரையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2.7 யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம்**

நாவற்குழி தண்ணீர் கோபுரம் மற்றும் அலுவலக கட்டிடம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக காணியை சுவீகரிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 யூன் 11 இல் ரூபா 3.45 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாண்மை 2017 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

**4.2.8 உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டோலையின் 18 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகள் வெளியேற்றப்பட்ட கழிவு மற்றும் உலர்த்தப்பட்ட கழிவு வெளியேற்றத்தின் நுண்ணியல் தரம் என்பவற்றுடன் சுத்திகரிக்கப்பட்ட கழிவு, தண்ணீரின் தரம் என்பவற்றின் தரம் மற்றும் அளவினை ஒழுங்கான கணக்காணிப்பு நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், வினைத்திறனான முகாமைத்துவத்தில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அப்பகுதி உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளால் கண்காணிப்பு பொறிமுறைகளை அமுலாக்குவதை நிரூபிப்பதற்கு சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

(ii) 2005 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை அமுலாக்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இணைந்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையும் இரண்டு தரப்பினராலும் பொருத்தமான பொறிமுறை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாமல் வவுனியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளருடன் நெற் பயிர்ச்செய்கைக்காக 03 நீர்ப்பாசனக் குளங்களை புதுப்பபித்தல் மற்றும் புளியங்குளம் மற்றும் கற்குளம் காணிகளை நிரப்பல் என்பவற்றிற்கு 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், உதவி ஆணையாளர் அதன்படி வேலைகளை செய்திருக்காததுடன் அகவே வேலைகள் தாமதப்பட்டிருந்தது. இதன்விளைவால், செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில் முன்னைய ஆண்டுகளில் இழப்பீடாகவும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிக்ககவும் ரூபா 21.8 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது.

(iv) செயற்திட்டமானது வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக கடனளிக்கும் முகவரின் அனுமதியின் கீழ் ரூபா 16.95 மில்லியன் கிரயத்தில் 02 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 2017 மே 19 இல் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், உரிய மோட்டார் வாகனங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் ஈடுபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தென் பிராந்திய அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

### 4.2.9 மொனறாகலை, புட்டளை நீர் வழங்கல் திட்டம்

---

2015 நவம்பர் 30 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையில் புரிந்தணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. உப ஒபபந்தம் மேற்கொள்வதற்கு சபையால் யூரோ 500,000 பெறுமதியான வேலைகள் கையேற்றக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாட்டில் சபைக்கு யூரோ 400,000 மாத்திரம் (ரூபா 62.81 மில்லியன்) அனுப்பப்பட்டிருந்ததுடன் மிகுதி யூரோ 100,000 (ரூபா 15.70 மில்லியன்) நடவடிக்கைகளில் நடுநிலையாக செயற்படாமல் ஒப்பந்தகாரரால் இலாப எல்லை மற்றும் மேந்தலையாக கருதப்பட்டிருந்தது.

### 4.2.10 தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 மார்ச் 06 தொடங்கி வைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு 2014 செப்தெம்பர் 05 அளவில் அதாவது 30 மாதங்களினுள் பூர்த்தியாக்குவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட போதிலும், ஒப்பந்தகாரர் அத்திகதியில் பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்ததுடன் அத்தகையவாறு, 2014 செப்தெம்பர் 06 முதல் 2018 மார்ச் 31 வரை 05 தடவைகளில் மேலதிகமாக 43 மாதங்களால் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தமானது 2018 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஐ.அ.டொலர் 199.36 மில்லியன் பெறுமதியில் பல்லேகல, பொதுகேர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த செயற்திட்டம் மற்றும் மற்றும் பன்னல, மஹந்டுர மற்றும் குழியாப்பிட்டிய நீர் வழங்கல் செயற்திட்டம் என்பவற்றின் இரண்டு வேறு ஒப்பந்தங்கள் முறையே 2015 நவம்பர் 26 மற்றும் 2016 திசெம்பர் 02 இல் அதே ஒ்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) மேலும், இந்த செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தார் பெறப்பட்ட கடன் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் தவணைப்பணங்கள் மற்றும் வட்டிகளாக முறையே ரூபா 1,964.32 மில்லியன் மற்றும் ரூபா 677 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் தாமதப்பட்ட காலப்பகுதியின் போது செயற்திட்ட அலுவலகத்தின் பராமரிப்பு தொடர்பில் உத்தியோகத்தர் மற்றும் மேந்தலை கிரயமாக ரூபா 151 மில்லியன் செலவினமொன்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகமாக ஏற்படவேண்டியிருந்தது.

### 4.3. தாமதமடைந்த செயற்திட்டங்கள்

---

காணி தெளிவுபடுத்தலிலுள்ள தாமதம், சுற்றுசூழல் மற்றும் மீள்குடியேற்ற விடயங்கள், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட குறைந்த தர பீ குழாய்கள் போன்றன காரணமாக ஏழு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் கவனத்திற்கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை | தொடங்கிய திகதி | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | நீடித்தல் காலப்பகுதி | தாமதப்பட்ட நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | | |
| உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் | 1,559 | 2011/12/27 | 2015/12/31 | 2017/12/31 – 2018/12/31 | 1095 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செயற்திட்டம் | | | | | |
| தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் கட்டம் 01 | 9,593 | 2012/03/06 | 2014/09/05 | 2014/09/06 – 2018/03/31 | 1302 |
| இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் | 4,493.66 | 2013/07/24 | 2015/07/24 | 2015/07/24 – 2016/02/29 | 220 |
| கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் | 7,148 | 2007/03/30 | 2012/09/30 | 2007/09/30 – 2017/07/20 | 1753 |
| கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் | 13,410 | 2009/12/18 | 2014/12/31 | 2014/12/31 – 2017/12/31 | 1095 |
| உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் | 19,165 | 2009/11/13 | 2013/06/30 | 2013/06/30 – 2018/12/31 | 2009 |
| கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம் | 4,785 | 2007/11/27 | 2012/01/31 | 2012/01/31 – 2017/06/20 | 1965 |
| கிழக்குப் மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம் | 7,702.25 | 2010/03/20 | 2013/12/20 | 2013/12/20 – 2015/12/31 | 741 |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் | 17,278 | 2010/02/03 | 2017/10/10 | நீடிக்க வில்லை | 385 |

## 4.4. உள்நாட்டு வங்கி கடன் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்

### 4.4.1 மாத்தறை மாவட்ட நீர் வழங்கல் இணைப்பு உறுதிப்படுத்தல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை மாவட்டத்தில் 1,300 நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்கும் நோக்கில் செயற்திட்டமானது தொடங்கப்பட்டது.

(ஆ) யூபீவீசீ குழாய்கள் வழங்குதல், பொருத்துதல் மற்றும் உபபாகங்கள் என்பவற்றிக்கான ஒப்பந்தம் 2015 மார்ச் 14 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 70,766,819 தொகையான யூபீவீசீ குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் அவற்றில் அவங்கப்பட்டது. எவ்வாறாயினும், யூபீவீசீ குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் 2014 திசெம்பர் 19 இலிருந்து 2015 யூலை 01 வரையான காலத்திற்காக வழங்கப்பட்டிருந்தது, 2018 ஆகஸ்ட் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் தொடர்புபட்டிருக்காத நடவடிக்கைகளிற்காக கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் மற்றும் பொருத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 4.4.2. கண்டி வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 01 இன் கீழான குழாயிடல்

குழாய்கள் குழாயிடலிற்காக ரூபா 77,705,705 மற்றும் ரூபா 94,032,235 ஆன இரண்டு ஒப்பந்தத்தின் பெறுமதி முறையே 2014 செப்தெம்பர் மற்றும் 2014 திசெம்பர் மாதங்களின் போது ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கப்பட வேண்டியப ட்டியலிப்பட்ட திகதி முறையே 2015 ஆகஸ்ட் மற்றும் 2015 யூலையாக இருந்தன. எவ்வாறாயினும், அந்த செயற்திட்டங்கள் 2015 செப்தெம்பர் 15 இல் ரூபா 33,677,822 கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 02 ஆண்டுகள் கடந்த பின்னரும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5. முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை மற்றும் பண்டாரவளை மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர மட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டங்களிற்காக ரூபா 235 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில், ரூபா 15.8 மில்லியன் அல்லது மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அவசர சிறிய சமூதாய (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு வழங்க்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 271.40 மில்லியன் அல்லது 54.3 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மேலும், மீளாய்வாண்டில் திருகோணமலையின் விரிவாக்கத்திற்காக ரூபா 250 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் எவ்வித செலவினமும் ஏற்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவனல்லையில் காட்சியறையில் போதிய இடமின்மை காரணமாக, எவ்வதி பாதுகாப்பும் இல்லாமல் காட்சியறைக்கு வெளியே பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்து. மேலும், காட்சியறையிலுள்ள தண்ணீர் மீற்றர்கள் கறையானால் சேதமடைந்திருந்தது.

(உ) கேகாலை மற்றும் களுத்துறை பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், நுகர்வோர் முறைப்பாடுகளைக் கையாள்வது தொடர்பில் மெதுவான முன்னெற்றம் அவதானிக்கப்பட்டது.

### 4.6. செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

சபையின் குறைவான கடன் சேவை இயலளவு காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்டிருந்த ரூபா 63,612,471,380 தொகையான கடன்களின் நிலுவையாகவிருக்கின்ற பெறுமதியை 2015 முதல் 2017 வரையான அரசாங்க உரிமை மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 4.7. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 26 காட்சி அறைகள் தொடர்பில் ரூபா 304,192,322 மொத்தமான மெதுவாக அசைகின்ற இருப்பு மீதிகள் அந்த காட்சி அறைகளின் மொத்த இருப்பு மீதிகளின் 40 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்றவை நீண்ட காலமாக இருந்தது.

(ஆ) ரூபா 539,183,367 மொத்தமான அசையாத இருப்பு மீதிகள் மற்றும் ரூபா 467,494,774 பெறுமதியான மெதுவாக அசைகின்ற இருப்புக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களில் இருந்ததுடன் சபையின் மொத்த இருப்புக்களில் முறையே 7 சதவீதம் மற்றும் 6 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்றது.

(இ) கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஆய்வுகூடங்களின் நிர்மாணத்திற்காக ரூபா 166,993,899 செலவழித்த பின்னர் செயற்திட்டமானது ஆட்சேர்ப்புக்களில் தவறியமை காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் 2012 இல் ஹப்புக்கல நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக ரூபா 16 மில்லியன் செலவழித்து காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் காணி சுவிகரித்த பின்னர் பாரிய வெடிப்பக்கள் காரணமாக அந்நாளில் குறித்த நோக்கததிற்காக காணி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.8. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 352,151,303 ஆன இடைப்போக்கிலுள்ள இருப்புக்களில், ரூபா 35,713,013 பெறுமதியான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இடைப்போக்கிலுள்ள இருப்புக்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்கள் இருப்பு மெய்மையாய்வுக்கு முன்னர் இருப்பு மீதிக்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 521,015,622 மொத்தமான தேறிய வரவு மீதிகள் மற்றும் ரூபா 284,249,255 மொத்தமான தேறிய செலவு மீதிகள் இருப்பு மெய்மையாய்வின் பின்னர் இருப்பு மீதிகளிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு 11 வாகனங்கள் விடுவித்திருந்தது. எவ்வாறாயினும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயலாளர் பிஏ-8942, பிஈ-5461 மற்றும் பிசீ- 5865 ஆம் இலக்கங்கள் கொண்ட 03 வாகனங்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார்.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1,244,968,958 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் அவதானிக்கப்பட்டது.

## 4.9. ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந்திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகளிகன் 8.3.9 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, 2017 திசெம்பர் 31 அளவில் வரிசை அமைச்சிற்கு 71 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சபையானது 2015 திசெம்பர் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் 31 வரை அந்த ஊழியர்களிடமிருந்து சம்பளங்களாக ரூபா 87,840,261 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட 28 ஊழியர்கள் மாத்திரம் அமைச்சின் கடமைகளிற்கு தீவிரமாக பங்காற்றியிருந்தனர். மேலும், சபையால் செலுத்தப்பட்ட அந்த ஊழியர்களிற்கான சம்பளங்கள் அமைச்சால் மீளளிப்பச்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஊழியர்களில், 40 ஊழியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒருங்கிணைப்பாளர் பதவி சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இருக்கவில்லை.

(இ) மேலும், 11 மோட்டார் வாகனங்களும் 2017 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தின் போது வரிசை அமைச்சிறிகு விடுவக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் திருத்தங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றிற்காக ரூபா 1,093,567 ஆன தொகை ஏற்பட்டிருந்தது.

## 4.10. பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது முகாமையாளர்கள் / பொறியியலாளர் (எந்திரவியல்), பொறியியலாளர் (மின்னியல்), பொறியியலாளர் (சிவில்), நடுத்தர மட்ட தொழில்நுட்ட (எம்எல்-ரீ) எழுதுனர் மற்றும் இணைந்த வகுதியினர், வேறு தொழில்திறன் தரம் மற்றும் அரைத் தொழில்திறன் போன்ற பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகளில் இருந்த 817 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ வேசவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை இறுதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சபையானது 2000 இலிருந்து 2016 வரையான ஆண்டுகளின் போது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு பல்வேறு வகுதிகளில் 140 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். சபையால் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் அந்த செயற்திட்டங்களால் சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 02 பிரதி பொது முகாமையாளர்கள், 18 உதவிப் பொது முகாமையாளர்கள், 28 பிரதம பொறியியலாளர்கள், 41 பொறியியல், 40 பொறியியல் உதவியாளர்கள் மற்றும் 3 சமூகவியலாளர்கள் போன்றோர் அவர்களில் உள்ளனர்.

(ஈ) 223 ஊழியர்கள் மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் சிவில் பொறியியலாளர் மற்றும் படம் வரைஞர் உள்ளடக்கப்பட்டது.

(உ) 508 ஊழியர்கள் திறைசேரி செயலாளர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் 2015 ஆம் ஆண்டில் பல் துறை தொழில்நுட்ப பயிற்சியாளர்களாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் 491 ஊழியர்கள் 2016 ஆம் ஆண்டின் போது அவர்களுடைய சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2016 முதல் 2018 வரையாக ஆண்டுகளிற்காக அவற்களிற்கான சம்பளங்களாக ரூபா 563.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மேற்குறிப்பிட்டவாறு சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையலிருந்து ஒருபகுதியான 1,628 ஊழியர்கள் சபையில் சேவை ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக அற்களிற்காக ரூபா 449 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.11 வெளிப்படையான முறையீனங்கள்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 தொடக்கம் 2006 வரையான காலத்தின் போது திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.66 மில்லியன் காசு மோசடிகளை 2017 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது வாசிப்பு மானி மூலம் களுத்துறை பிராந்தியத்தில் பங்களிப்புச் செய்யப்பட்ட ரூபா 1,145,235 ஆன மோசடி 2018 ஆகஸ்ட் 31 வரையும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5. பொருத்தமான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைதல்**

ஐக்கிய நாடுகளின் பொருத்தமான அபிவிருத்தி குறிக்கொள்களில் 2030- கால அட்டவணை வழங்குகையில் 2030 இல் தன்னார்வ அந்த மகளீர் மற்றும் பெண்கள் தேவைகளிற்கு கவனம் செலுத்தி திறந்த துதிறந்த மலங்கழத்தல்களிற்கான போதிய மற்றும் சமத்தவமான சுகாதர மற்றும் சுத்தமான வழிகள், விசேட செலுத்தல்கள் கசலருக்காகவும் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்க வாய்ப்பளிப்பதற்கு பொதுவான மற்றும் சமத்துவமான வழியில் அடைதலாக பொருத்தமான அபிவிருத்தி குறிக்கோள்களை இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் நோக்கெல்லையின் வருகின்ற ஏனைய குறிக்கொள்கள், இலக்குகள் மற்றும் எல்லைகளை இனங்காண்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொருத்தமான அபிவிருத்தி குறிக்கொள்களை அமுலாக்கும் நோக்கில் சபையால் உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**6. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**6.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதவி பொது முகாமையாளர், 5 பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள், மூன்று உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் பொறியியலாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு பிரிவில் 16 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளின் பெரிய எண்ணிக்கை சபையால் மேற்கொள்ளப்படகின்ற பொதிலும் போதிய உத்தியோகத்தர் எண்ணிக்கை சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவுக்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான பல செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லலை.

**6.2. கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

**6.2.1 கொள்வனவகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 (அ) பிரிவின் பிரகாரம், சபையால் பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 39 மில்லியன் பெறுமதியான 370 கணனிகள் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான கொள்வனவுத் திட்டத்திற்காக சபை பணிப்பாளர்களின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு காலரீதியாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட தெரிவுசெவ்வையின் பிரகாரம், கடிதங்கள் வழங்குதவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குநர்களிடமிருந்து சில சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் 11 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சிலான குறிப்படத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 8. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | உள்ளக திணைக்களரீதியாக தரவகளுடன் கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் நடைபெறும் வேலை மீதிகள் மற்றும் கணக்கீட்டுத் தரவுகளை இணக்கம் செய்வதற்கு தவறியிருந்தது. |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) வேறுபட்ட பிராந்தியங்களிலுள்ள ஒரே வகை நிலையான சொத்துக்களின் இரட்டிப்பு |
| | (ii) நிலையான மற்றும் கற்பனைச் சொத்துக்களின் பெறுமதியை மீளாய்வு செய்து மீளவெளிப்படுத்தாமை |
| | (iii) செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமை |
| | (iv) நீண்ட காலமாக மாற்றமடையாதிருந்த நடைபெறும் வேலை மீதிகள் பற்றி புலனாய்வு செய்வதற்கு தவறியமை |
| | (v) உரிய நேரத்தில் கணிப்பீட்டுச் சபையை பூர்த்தியாக்கவதற்கு தவறியமை |

| | | | |
|---|---|---|---|
| | | (vi) | ஏனைய நிறுவனங்களிற்கு உரிமையான வாகனங்களை விடுவித்தல் |
| | | (vii) | செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர் காணிகளை சுவீகரிப்பதற்கு தவறியமை |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | பேரேட்டு மீதிகளுடன் சேர்த்து பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளை இணக்கம் செய்யாமை |
| | | (ii) | இடைப்போக்கிலுள்ள மீதிகளில் நீண்ட நிலுவையாகவிருக்கின்ற இருப்புக்கள் நிலவியமை மற்றும் களஞ்சியங்களில் நீண்டகாலம் நகர்வற்ற மற்றும் மெதுவாக நகரும் இருப்பு விடயங்கள் உள்ளன. |
| | | (iii) | ஒருங்கிணைந்த இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பேணுவதற்கு தவறியமை |
| | | (iv) | அதிகப்படியான பொருட்களை கொள்வனவு செய்தல் |
| | | (v) | பாதுகாப்பு மற்றும் போதிய இடம் இல்லாமல் காட்சியறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு | (i) | எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தியாக்க தவறியமை மற்றும் தகுந்த காரணங்கள் இல்லாமல் அதிகமான செயற்திட்டங்களின் காலப்பகுதி நீடிக்கப்படுதல் |
| | | (ii) | சாத்திய வள ஆய்வை சரியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை |
| | | (iii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுடன் இணங்காமை |
| | | (iv) | கால நீடிப்பு மற்றும் நிதிப் பயன்பாடுகளிலுள்ள நலிவுகள் காரணமாக கிரயம் உயர்வாக இருந்தமை. |
| | | (v) | பொறியியலாளர் மதிப்பீடுகளிலிருந்து அதகூடிய மாறுபட்ட தொகையுடன் ஒப்பந்தங்களை வழங்குதல் |
| (உ) | மீள்சுழற்சி திட்டங்களின் கணக்கீடு | | மீள்சுழற்சி திட்டங்களிற்காக பெறப்பட்ட முற்பணம் ஏற்பட்ட சம்பந்தப்பட்ட செலவினங்களை தீர்ப்பனவு செய்யாமல் நீண்ட காலமாக பொறுப்பில் இருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஊ) ஆளணி முகாமைத்துவம் | (i) | வேண்டப்பட்ட அதிகாரம் இல்லாமல் வேறு நிறுவனங்களிற்கு மனித வளங்களை விடுவித்தல் |
| | (ii) | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தமை |
| | (iii) | போலிச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களை பதவியுயர்த்தல் |
| | (iv) | ஊழியர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதம். |